# அருந்ததியருக்கு உள்இட ஒதுக்கீடு

அடுக்கப்பட்ட மூட்டைகளில் அடிமூட்டையாகவும், ஒடுக்கப்பட்ட பட்டியலின மக்களிலேயே மிகவும் ஒடுக்கப்பட்டவர்களாயும் உள்ள அருந்ததியர் சமூக மக்களின் வாழ்நிலை மிகவும் கொடுமையானது.

மாநகராட்சி, நகராட்சி போன்ற உள்ளாட்சித்துறை அலுவலங்களில் துப்புரவு வேலை செய்பவர்களாகவும், சாலையோரங்களில் பழைய செருப்பு தைப்போர்களாகவும், கிராமங்களில் ஆதித்த சாதிக்கு தற்போது சொந்தமாக உள்ள பண்ணை நிலங்களில் பண்ணை அடிமைகளாகவும் உள்ளனர்.

ஆங்கிலேயன் இம்மக்களுக்கு இவர்களின் வறிய நிலையை கண்டு கொடுக்கப்பட்ட பன்னிரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் யாவும், கள்ளுக்கு, கடன் வாங்கியமைக்கு கந்துவட்டி மூலமாக கட்டாயமாக பறிக்கப்பட்டு, இன்று இம்மக்கள் நிலமிழந்து வறியவர்களாக உள்ளனர்.

'பஞ்சமி நிலம்' எனப்படும் இந்நிலங்கள் விற்க முடியாது, விற்றாலும் "செல்லாது" என்கிற நிபந்தனையின் பேரில் வழங்கப்பட்டாலும், இந்த 'கன்டிசன்' நிலங்கள் வருவாய்த்துறையிலுள்ள ஆதிக்கசாதியினரும், காவல்துறையிலுள்ள ஆதிக்க சாதியினரும், அரசியலில் உள்ள ஆதிக்க சாதியினருடன் (கட்சிபேதம் இல்லாமல்) இணைந்து சட்டத்திற்கு புறம்பாக இன்றைக்கும் அனுபவித்து வருகிறார்கள்.

பன்னிரண்டு லட்சம் ஏக்கர் நிலங்களும் இன்று தாழ்த்தப்பட்டோரிடம் இல்லாமல் பறிக்கப்பட்டுள்ளது. இதை மீட்க எந்த ஆதிக்கசாதி அரசியல் கட்சியும் தயாராக இல்லை. பேசவும் தயாராக இல்லை. இது சட்டத்தை மீறிய அப்பட்டமான ஒரு அநீதியாகும்.

தமிழக அரசுப்பணிகளில் துப்புரவு பணியை தவிர மற்ற அனைத்து பணிகளிலும் ஒரு சதவீத இடஒதுக்கீடு கூட இல்லாமல், பாதுகாப்பற்ற சூழலில் வன்கொடுமைக்கு நாளும் ஆளாகிற நிலையில் உள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட நிலையில், 'அரசு' தமது ஏதாவது சிறப்புத் திட்டங்கள் மூலம் உதவி செய்யும் என எதிர்பார்த்த அருந்ததியர்கள் ஏமாந்தனர். கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக தனிஇட ஒதுக்கீடு வேண்டும் என்கிற கோரிக்கையை முன்வைத்து வருகிறார்கள்.

இந்த கோரிக்கையை வலுவாக எடுத்துச் செல்ல கடந்த காலத்தில் அருந்ததியர் அமைப்புகள் தவறிவிட்டன. இந்த நிலையில் ஆதித்தமிழர் பேரவை உள்இட ஒதுக்கீடு கோரிக்கையை வலுவாக முன்னெடுத்து சென்றது.

பல்வேறு போராட்டங்களை நடத்தியதுடன், கடந்த 2008-ம் ஆண்டில் மட்டும், பல கருத்தரங்குகளையும், 19 மாவட்ட மாநாடுகளையும் நடத்தி பல கட்சிகளைச் சேர்ந்த தலைவவ்களையும் அழைத்து பங்கேற்க வைத்து தமிழக அரசின் கவனத்தை ஈர்க்க வைத்தது.

சென்னையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 20 ஆயிரம் பேர் கலந்து கொண்ட ஒரு பேரணியை 20080ல் நடத்தி அருந்ததியர் தலைவர்களை முதல்வரிடம் அழைத்துச் சென்று பேசவைத்தது.

முதல்வர் கலைஞர் உள்இட ஒதுக்கீட்டை பரிசீலனை செய்வதாக ஏற்றுக்கொண்டு உடனடியாக சட்டப் பேரவையில் இதற்கான அறிவிப்பை செய்தார்.

இதன் தொடர் நடவடிக்கையில் ஒரு பகுதியாக ஒரு அனைத்துக் கட்சி கூட்டத்தை ஏற்பாடு செய்து 12.03.2008 அன்று தலைமை செயலகத்தில் கூட்டினார். இக்கூட்டத்தில் 27 கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர். ஆதித் தமிழர் பேரவையின் சார்பில் நான் கலந்து கொண்டேன்.

முதல்வர் அவர்கள் அருந்ததியருக்கு மக்கள் தொகை அடிப்படையில் 2.35% சதவீதம் வழங்கலாமா ? என ஆலோசனை கேட்டார். மருத்துவர் கிருஷ்ணசாமி இன்று எனக்கு "கருப்பு நாள்" எனக்கூறி வெளிநடப்பு செய்தார்.

திருமாவளவன் அவவ்கள் அருந்ததியர் உள்இட ஒதுக்கீட்டிற்கு எதிரான அனைத்து வாதங்களையும் வைத்து பேசினார்.

பேரவையின் சார்பில் பேசிய நான் 2.35% இட ஒதுக்கீட்டை ஏற்க முடியாது. 6% இட ஒதுக்கீடு வேண்டும் என வலியுறுத்திப் பேசினேன். இதையொட்டி பல்வேறு புள்ளி விபரங்களை எடுத்து வைத்தேன்.

அனைத்துக் கட்சிகளும் அருந்ததியர் (அ.இ.அ.தி.மு.க.வைத் தவிர)-களுக்கு உரிய உள்இட ஒதுக்கீடு வழங்கவேண்டும் என வலியுறுத்தியது.

அகில இந்திய அண்ணா தி.மு.க. பிரதிநிதிகள் மட்டும் எவ்வித கருத்தையும் தெரிவிக்காமல் சென்றனர்.

கூட்ட முடிவில் கலைஞர் நீதியரசர் எஸ்.எஸ். சனார்த்தனம் தலைமையிலான ஒரு நபர் குழுவை அமைத்து (25.03.2008-ல்) ஆறு மாதத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

நீதியரசர் எம்.எஸ். சனார்த்தனம் அவர்கள் யாரையும் சந்திக்க செல்லாமல், எங்கும் பயணம் செய்யாமல், இருந்த இடத்தில் இருந்து கொண்டு ஆவணங்களை மட்டும் ஆய்வு செய்து 22.11.2008 அன்று அரசுக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தார்.

இந்த அறிக்கையில் அருந்ததியர்களுக்கு 2.88% உள்இட ஒதுக்கீட்டை வழங்க பரிந்துரை செய்தார். இதை பார்த்த ஆதித் தமிழர் பேரவை உடனடியாக அனைத்து அருந்ததியர் இயக்கத்தலைவர்களையும் சென்னைக்கு வரவழைத்து 26.11.2008 அன்று ஒரு கூட்டம் நடத்தியது.

இதன்பிறகு 27.11.2008 அன்று முதல்வரை நேரில் சந்தித்து 3% இடஒதுக்கீடு போதுமானதல்ல, 6% உள்இட ஒதுக்கீடு வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது.

முதல்வர் அவர்கள் முதலில் இந்த 3% இடஒதுக்கீட்டை ஏற்றுக் கொள்ளுங்கள். பிறகு படிப்படியாக இதை அதிகரிக்க முயற்சி மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

ஒருநபர் குழுவின் பரிந்துரையாக 2.88% உள்இட ஒதுக்கீட்டை 3% வீதமாக மாற்றி வழங்குவதென அரசு கொள்கை அளவில் முடிவு செய்வதாக முதல்வர் கலைஞர் அறிவித்தார்.

இதை எப்படி முறையாக சட்டமாக்குவது என்கிற நடைமுறையை கவனிக்க அமைச்சர் பொன்முடி தலைமையில் ஒரு குழுவை அமைத்து, அந்த குழுவும் 08.12.2008 அன்று முதல்வரிடம் அறிக்கை கொடுத்தது.

இதுவரை அருந்ததியர் உள்இட ஒதுக்கீட்டுக்காக அரசு எடுத்துக் கொண்ட அனைத்து முயற்சிகளுக்கும், பேரவையின் சார்பில் முதல்வர் கலைஞருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. அதே நேரத்தில் 6% உள்இட ஒதுக்கீட்டுக்கான தேவை குறித்தும் விரிவாக முதல்வரிடம் எடுத்து வைக்கப்பட்டது.

3% இடஒதுக்கீடு போதுமானதல்ல என்பதற்கான காரணங்கள் வருமாறு:-

நீதியரசர் எம்.எஸ். சனார்த்தனம் அவர்கள் 2001-ஆம் மத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பை மட்டுமே மைமாக வைத்து அருந்ததியர் மக்கள் தொகை 2.88% என தெரிவித்துள்ளார்.

முதல்வர் கலைஞர் அவர்கள் அத்துடன் 2% சதவீதத்தை சேர்த்து 3% சதவீதமாக வழங்கியுள்ளார்.

2001 ஆண்டு கணக்கெடுப்பு விவரம் வருமாறு (தமிழ்நாடு)

| | | |
|---|---|---|
| மொத்த மக்கள் தொகை | : | 6.24 கோடி |
| பட்டியலினத்தோர் எண்ணிக்கை | : | 1.18 கோடி (19%) |

மொத்தம் 76 சாதிகள்

இதில் 2 சாதிகள் இல்லை

(கக்காளன், பாதன்னன்)

இதில்,

| | | |
|---|---|---|
| ஆதி திராவிடர்கள் | : | 54 லட்சம் (45.6%) |
| பள்ளர்கள் | : | 23 லட்சம் (19.27%) |
| பறையர்கள் | : | 18 லட்சம் (15.7%) |
| சக்கிலியர்கள் | : | 8 லட்சம் (6.6%) |
| அருந்ததியர்கள் | : | 8 லட்சம் (6.5%) |

ஆதிதிராவிடர், பறையர், பள்ளர், அருந்ததியர், சக்கிலியர்

இதில் 35 சாதிகளின் எண்ணிக்கை ஆயிரத்திற்கும் குறைவு.

ஆக, மேலே குறிப்பிட்ட 5 சாதிகள் மட்டும்

(3 சாதிகள்) மட்டும் 93.5% இடம் பிடித்துள்ளன.

தற்போதுள்ள நிலையில் அருந்ததியருக்கு 3% உள்இட ஒதுக்கீடு போனால் மீதமுள்ள 15% இடம் மற்ற இரண்டு சாதிகளின் ஒட்டுமொத்த பங்காக முடியும்.

தற்போது தமிழகத்தில் 'ஆதி திராவிடர்' எனும் பொதுப் பெயரில் மட்டுமே பல அருந்ததியரும் சான்றிதழ் பெற்றுள்ளனர்.

ஆதிதிராவிடர் எனும் பொதுத் தலைப்பில் 54 இலட்சம் பேர் என்பது கூர்ந்து நோக்கத்தக்கது.

இந்த 54 லட்சம் பேரில் மூன்றில் ஒரு பங்கு அருந்தியர்கள் ஆவார்கள். அதாவது 18 லட்சம் பேர்கள்! என்பதை நாம் மறந்து விடலாகாது.

ஏற்கனவே உள்ள சக்கிலியர்கள் 8 லட்சமும், அருந்தியர்கள் 8 லட்சமும், இந்த 18 லட்சமும் (ஆதிதிராவிடர் பெயரில் உள்ள அருந்ததியர்கள்) சேர்த்தால் மொத்தம் 34 லட்சம் மக்கள் தொகை ஆகிறது.

மொத்தம் உள்ள 12 அருந்ததியர் உப சாதிகளில் இரண்டு மட்டுமே கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இன்னும் 10 சாதிகளின் கணக்கு இத்துடன் சேர்க்கப்படவில்லை. ஆக இதையெல்லாம் சேர்த்தால் 40 லட்சத்திற்குமேல்தான் அருந்ததியர் எண்ணிக்கை வரும். மேலும் 2001-க்கு பிறகு இனி 2011 எடுக்கப்படும் மக்கள் தொகைதான் முழுமையான எண்ணிக்கையைத் தரும்.

சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தினால் மட்டுமே முழுமையான மக்கள் தொகை விவரம் தெரியவரும்.

அங்கொன்றும், இங்கொன்றுமாக கணக்கு எடுக்காமல் முழுமையாக தமிழக அரசே கணக்கெடுப்பை மேற்கொள்ளலாம்.

6% உள்இட ஒதுக்கீட்டுக்கு மிக நியாயமான காரணங்கள் உள்ளன. அருந்ததியர் மக்கள் மீது பல இழிவான தொழில்கள் வன்முறையாக திணிக்கப்பட்டு பல ஆண்டுகளாக செய்து வருகிற காரணத்தாலும், கல்வி இம்மக்களுக்கு முறையாக வழங்காமல் மறுக்கப்பட்டதாலும், தனியார் துறைகள் அருந்ததியர்களை அன்னியப்படுத்தியதாலும், இம்மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே 18% இடஒதுக்கீட்டில் மறு பங்கீடு என்பது தவிர்க்க முடியாத சமூகநீதியாக ஆகியுள்ளது.

இதையும் கலைஞர் மட்டுமே செய்ய முடியும் என்பதை உறுதியுடன் நிரூபித்துள்ளார். கலைஞரை அருந்ததியர் சமுதாயம் நன்றியுடன் நினைப்பதையும் அவருக்கு நன்றி பாராட்டுதலையும் மிகப்பெரிய அளவில் செய்யவேண்டும்.

ஆதித் தமிழர் பேரவை முதல்வர் கலைஞருக்கு 2010 மே மாதத்தில் கோவையில் ஒரு மிகப்பெரிய பாராட்டுதலையும், நன்றி தெரிவிப்பதையும் மாநாடாக ஒரு லட்சம் பேரவை திரட்டி இதை செய்ய ஏற்பாடுகளை செய்து கொண்டுள்ளது.

உள்இட ஒதுக்கீடு வழங்க மாநில அரசுக்கு அதிகாரம் இல்லையென்றும், மத்திய அரசுக்குத்தான் அதிகாரம் உள்ளதென்பது போல ஒரு வடிகட்டிய உண்மைக்கு மாறான அறிக்கை வெளியிட்ட முன்னாள் முதல்வர் ஜெயலலிதா-வின் முகமூடி கிழித்தெறியப்பட்டுள்ளது.

அனைத்து கட்சி கூட்டத்தில் கருத்து சொல்லாமல் ஏமாற்றிய ஜெயலலிதா இப்போது அருந்ததியர் மத்தியில் அம்பலமாகியிருக்கிறார்.

அதேபோல உள்இட ஒதுக்கீடு வழங்குவதால் தாழ்த்தப்பட்ட மக்களின் ஒற்றுமை சீர்குலையும் என்பது சுயநலவாதி தலைவர்களின் பிதற்றல்.

தாழ்த்தப்பட்டோர் ஒற்றுமை என்பது ஒருவகையான பொய் தோற்றமே! சாதி மீறி காதல் மனம் புரிந்தாலே குத்தும், வெட்டும் நடக்கியது என்பது உண்மை நிலைமை.

அரசுப்பணியில் அருந்ததியர் நிலை

| | | |
|---|---|---|
| 1. | துணை வேந்தர் (20) | ஒருவர் கூட இல்லை |
| 2. | உயர்நீதிமன்ற நீதிபதிகள் (45) | ஒருவர் கூட இல்லை |
| 3. | இந்திய ஆட்சிப்பணி (3) | |
| | இந்திய காவல் பணி (தமிழ்நாட்டில்) (1) | |
| 4. | வானூர்தி மகளிர் பயிற்சி 100-ல் | 3 பேர் மட்டுமே |
| | (ஆதி திராவிடர்கள் மட்டும்) | (30 பேர் இருக்கவேண்டும்) |
| 5. | மருத்துவக் கல்லூரியில் 2008-ல் | 11 பேர் |
| | 2009-ல் | 86 பேர் (3% இட ஒதுக்கீட்டிற்கு பிறகு) |
| | பொறியியல் கல்லூரியில் 2008-ல் | 700 பேர் |
| | 2009-ல் | 4000 பேர் |
| 6. | அமைச்சரவையில் | ஒருவர் கூட இல்லை |
| 7. | சட்டப்பேரவை தொகுதிகளில் (44) | 3 பேர் மட்டுமே |

இதைப்போன்ற பல புள்ளி விவரங்கள் முழுமையாக கிடைக்கப்பெறவில்லை. ஒரு நபர் குழுத் தலைவர் நீதியரசர் எம்.எஸ். சனார்த்தனன் அவர்களால் கேட்கப்பட்ட பல விவரங்கள் அரசின் தலைமை செயலகத்திலுள்ள அதிகாரிகளால் தரப்படவில்லை என்பது உண்மை.

முதல்வரிடம் புகார் செய்த பிறகு அதிகாரிகளின் ஒத்துழைப்பு சிறிது கிடைத்துள்ளது.

கலைஞர் அவர்களின் கடுமையான முயற்சியாலும், பல்வேறு எதிர்ப்புகள் இருந்தபோதிலும், சமூக நீதியை நிலைநாட்டி, பெரியார் தொண்டர் என்பதை நிரூபித்துள்ளார்.

உடல்நலக்குறைவு ஏற்பட்டு அப்பல்லோ மருத்துவமனையில் இருந்தபோதும், முரசொலியில் கடிதம் எழுதியதுடன், அனைத்து சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் விடுக்கும் கடிதம் தளபதி ஸ்டாலின் அவர்களால் பேரவையில் படிக்கப்பட்டு அருந்தியர்களுக்கு உள்இட ஒதுக்கீடு எவ்வித எதிர்ப்புமின்றி நிறைவேற்றப்பட்டது.

29.11.2008 நாளிட்ட அரசாணை எண்.50-ம், 29.12.2009 நாளிட்ட அரசாணை எண்.61-ன் ஆதிதிராவிட நலத்துறையால் வெளியிடப்பட்டு இந்திய துணைக் கண்டத்தில் சரித்திர சாதனையாக்கப்பட்டுள்ளது.

எவ்வித தொய்வும் இல்லாமல் தமிழகத்தில் அருந்ததியர்க்கான மூன்று சதவீத உள்இட ஒதுக்கீடு நடைமுறைக்கு வந்து, அருந்ததியர் வாழ்வில் ஒளி ஏற்றப்பட்டுள்ளது.

ஆதித் தமிழர் பேரவை இதற்காக உழைத்த அனைத்து தோழர்களுக்கும், இதை உறுதியாக ஏற்று செயல்படுத்திய கலைஞருக்கும் அவர் தலைமையில் உள்ள தி.மு.க. அரசுக்கும் அருந்ததியர்கள் என்றும் நன்றிக்கடன் பட்டுள்ளார்கள்.